| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 10/- |
| ஆண்டுச் சந்தா | ரூ. | 100/- |
| ஆயுள் சந்தா | ரூ. | 1000/- |


# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 11 இதழ் : 1 நவம்பர் 2014



"நீ ஆயத்தப்படு,
உன்னுடனே கூடின
உன் எல்லாக் கூட்டத்தையும்
ஆயத்தப்படுத்து நீ அவர்களுக்குக்
காவலாளனாயிரு" எசேக்கியேல் 38:7

ஆசிரியர்.
பேராயர். வே. தேவதாஸ்

# மும்பை போதகர்களின் பணித்தள வருகை



ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்துடன்



பாட்டன்பூர் கிராம ஆலய ஆராதனையில்



கங்கோலா கிராம ஆலய ஆராதனையில்



பத்ரா கிராம ஆலயத்திற்கு முன்பு

# ஷாலோம் சுதேச ஊழியர் மனைவிமார் கூடுகை



பாடல் & ஆராதனை வேளை



தேவ செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



பாடல் வேளை



தங்களுடைய சொந்த ஜனங்களின் இரட்சிப்பிற்காக கண்ணீரோடு ஜெபிக்கும் பெண்கள்

## உங்கள் சகோதரனிடமிருந்து



*கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பணித்தளத்திலிருந்து என் அன்பின் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இம்மாத மலர் மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த அக்டோபர் மாதம் முழுவதும் கர்த்தர் ஊழியப் பாதையில் நம்மைக் காத்து வழிநடத்தி வந்தார்.**தேவனுக்கே மகிமை!** செலுத்தி உங்கள் யாவரின் ஜெபங்களுக்காக ஊழிய ஆதரவுகளுக்காக நன்றி கூறுகிறேன்.

அக்டோபர் மாதத்தில் 5, 12, 19 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் ஷாலோம் மிஷன் ஞாயிறு மிக நேர்த்தியாக தேவநாமம் மகிமைப்பட ஆசரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 6, 13, 20 தேதிகளில் ஊழியர்கள், மூப்பர்கள் கூடுகையில் வந்து சபை, சபையாக தேவனைத் துதித்து காணிக்கைகளை அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

அக்டோபர் 4, 5 தேதிகளில் மும்பையிலிருந்து Friends of Christ ஐக்கியத்திலிருந்து 5 வாலிபர்கள் குழுவாக வந்து பணித்தளத்தைப் பார்வையிட்டு ஊழியங்களைத் தாங்கவும், மற்றவர்களுக்கு ஷாலோம் ஊழியங்களை அறிமுகம் செய்யவும் முன்வந்தார்கள்.

அக்டோபர் 6, 7, 8 தேதிகளில் கோவை St. PaulSchool, College நிறுவனரும், தேவனுடைய ஊழியருமான **Rev. டேவிட் ஐயா** அவர்கள் மூன்று நாட்கள் மூன்று மாநிலங்களில் பணித்தளத்தில் ஊழியங்களை நிறைவேற்ற குறிப்பாக மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்டம் நெகடியா கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார்.

மேலும் கடந்த மாதத்தில் 3 மாநிலங்களிலும் உள்ள சுதேச ஊழியர்களுடைய மனைவிமார்களுக்கு சிறப்புக் கூடுகை குஜராத்தில் தெல்சர், மத்தியப்பிரதேசத்தில் அன்தர்வேலியாவிலும், இராஜஸ்தானில் கோய்க்காவிலும் நடைபெற்றது. தேவன் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தி சபை வளர்ச்சிக்கான புதிய அபிஷேகத்தையும், தரிசனத்தையும் பெற்றுக் கொள்ள கிருபைத் தந்தார். மேலும் குஜராத் மத்தியப்பிரதேசத்தில் உள்ள சுமார் 300 ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது.

இந்த மலர் உங்கள் கைகளில் கிடைக்கும்போது ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் குஜராத்தில் பரூச் நகரில் உள்ள Spritual Life Centre- ல் முடிந்திருக்கும். அன்பு **சகோ. மோகன் சி.லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார் நாலுமாவடி) மற்றும் **பேராயர் தயானந்தம்** (சென்னை) அவர்களும் பங்கு பெற்று சிறப்பாக நடத்தித் தந்துள்ளார்கள். விரிவான அறிக்கையை அடுத்த மாத மலரில் வெளியிடுகிறோம்.

## நவம்பர் மாத ஊழியங்களுக்காக உங்கள் விசேஷித்த ஜெபங்களை எதிர்பார்க்கிறோம்.

| | |
|---|---|
| நவம்பர் 3 - 7 | Vision India வாலிபர்கள் முகாம் சோன்கட், குஜராத். நம் ஷாலோம் வாலிபர்கள் 500 பேர்கள் பங்கு பெறுகிறார்கள். **பேராயர் தேவதாஸ்** அவர்கள் நவம்பர் 6ம் தேதி செய்தியளிப்பார்கள். |
| நவம்பர் 8 | IT Fellowship ஜெபக்கூடுகை, சென்னை. |
| நவம்பர் 13-16 | **Bro. R.D. சுந்தர்சிங்** (இயேசுவின் ஊழியங்கள் நெய்யாட்டின்கரை) சிறப்பு ஊழியங்கள் மற்றும் 5 கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை. |
| நவம்பர் 18-21 | **Pr. ஜார்ஜ் ராபர்ட்** (Praise Tower Chennai) பணித்தள சிறப்புக் கூட்டங்கள் 2 கிராம ஆலய பிரதிஷ்டைகள். |
| நவம்பர் 21-23 | **சகோ. T. ஸ்டீபன்** (Gods Love Ministries, Chennai) பணித்தள சிறப்புக் கூட்டங்கள் 22ம் தேதி 1 கிராம ஆலய பிரதிஷ்டை. |
| நவம்பர் 23 | இயேசு விடுவிக்கிறார் மூலமாக கட்டப்பட்ட தெல்வாணி கிராம ஆலயப் பிரதிஷ்டை, மத்தியப்பிரதேசம். |
| நவம்பர் 24-25 | Shalom Staff Leadership Training Ahmedabad by **Bro. Joy Clark.** |
| நவம்பர் 28-30 | **Pas. ஜாண்சகின், சகோ. ஜாண் விக்டர்,** K.K. District. ஆகியோரின் பணித்தள வருகை. |
| நவம்பர் 29-30 & டிசம்பர் 1 | **சகோ. சாமுவேல் நடராஜன்** (துபாய்) அவர்களின் பணித்தள வருகை & மூன்று ஆலய பிரதிஷ்டைகள். |

மேலும் நவம்பர் மாதம் 15 கிராம ஆலய பிரதிஷ்டைகள் உள்ளது. அதற்காக ஜெபியுங்கள். மேற்கண்ட ஊழியங்களில் தேவன் அனைத்து ஊழியர்களையும் வல்லமையாகப் பயன்படுத்தவும், பிரயாண கிருபை மற்றும் தேவனுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

மேலும் 2014 கிறிஸ்துமஸ் பண்டிகை ஆயத்தங்களுக்காகவும் ஜெபியுங்கள். சுதேச ஊழியர்கள், Project ஊழியர்கள், பணித்தள மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களாக 635 குடும்பங்களுக்கும் குறிப்பாக சுதேச ஊழியர்கள் பிள்ளைகள், மற்றும் நம்மால் தாங்கப்படும் ஆதிவாசி மாணவர்கள் என 2050 ஆதிவாசி பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் வெகுமதி வழங்கப்பட, ஜெபித்து உங்கள் பங்கினை மறவாது அனுப்புங்கள்.

**"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்".** (எபிரேயர் 6 : 14) – என்ற வாக்குத்தத்தத்தின்படி கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# ஆயத்தப்படு... ஆயத்தப்படுத்து..



சிறப்புச் செய்தி : பேராயர். **V. தேவதாஸ்**

**"நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு". –** எசேக்கியேல் 38 : 7

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே, "ஆயத்தம்" என்கிற வார்த்தை நம் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் மிக முக்கியமான, அவசியமான, கவனிக்கப்பட வேண்டிய வார்த்தை. எல்லாக் காரியங்களுக்கும் ஆயத்தங்கள் தேவை. மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு முன்பாக நன்கு படித்து ஆயத்தமாக வேண்டும். ஒரு வீடு கட்ட வேண்டுமானால் வரைபடம், அனுமதி, பொருட்கள், வேலை ஆட்கள் போன்ற ஆயத்தங்கள் செய்யவேண்டும். திருமணத்திற்கு அழைப்பு, சாப்பாடு, அலங்காரம், துணிமணிகள் மட்டுமல்லாமல் மணமக்களும் ஆயத்தமாக வேண்டும். ஒரு ஊழியத்தில் நற்செய்திக் கூட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டுமானால் ஜெபம், அனுமதி, விளம்பரம், பிற வசதிகள் என பல மாதங்கள் ஆயத்தப்பட அவசியமாய் உள்ளது. அதே போலத்தான் வேதம் சொல்கிறது : நம் ஒவ்வொருவரும் நம்முடைய தேவனை சந்திக்க ஆயத்தப்பட வேண்டும். ஆமோஸ் 4 : 12–ல் **"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"** என்று எழுதப்பட்டுள்ளது.

கர்த்தருடைய ஜனங்களாய், விசுவாசிகளாய் இருக்கிற நாம் இரண்டு காரியங்களுக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். முதலாவது நம்மைக் கர்த்தர் இன்று எடுத்துக் கொண்டால் நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறோமா? இல்லையெனில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இன்று இருக்குமானால் தேவனைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறோமா? தேவனுக்காக வைராக்கியமாய் அனுதினமும் ஓடி உழைக்கும் தேவ மனிதன் இவ்வாறு கூறினார் : நாளை கர்த்தர் வருவாரானால், இல்லையெனில் கர்த்தர் என்னை அழைப்பாரானால் இன்று எப்படி ஊழியம் செய்வேனோ, என்னை எப்படி ஆயத்தப்படுத்துவேனோ அப்படியே அனுதினமும் ஊழியம் செய்தும், வாழ்ந்தும் வருகிறேன் என்றார். நாமும் கூட அப்படியே ஆயத்தப்படுவது மட்டுமல்லாமல், நம்மை சுற்றி உள்ளவர்களையும் ஆயத்தப்படுத்த வேண்டும் என வேதம் சொல்கிறது. முதலாவது நம்மை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதை தியானிப்போம்.

இவ்வுலகில் வாழ்கிற நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் தாலந்துகள், திறமைகளை தந்துள்ளார் என்பதை மறந்துவிடக்கூடாது. அவனவன் திறமைக்குத் தக்கதாக தேவன் கொடுத்துள்ளார். தேவன் நமக்கு தந்த நேரம், தாலந்து, பொருளாதாரம் இவைகளை சரியானபடி பரலோக இராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கு பயன்படுத்தினால் நாம் தேவனை சந்திக்கும் போது **"நல்லது உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியக்காரன்"** என்று அழைக்கப்படுவோம். மட்டுமல்லாமல் எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசிக்கக் கிருபை பெறுவோம்.

**“நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.”** – ரோமர் 12 : 6–8

மத்தேயு 25: 31–46 வரையுள்ள பகுதியை வாசித்துப் பாருங்கள். ராஜா மகிமையில் வரும்போது இரண்டுப் பிரிவாக ஜனங்களைப் பிரிக்கிறார். பசியாயிருந்தவர்கள், தாகமாயிருந்தவர்கள், அந்நியனாக இருந்தவர்கள், வஸ்திரமில்லாதிருந்தவர்கள், வியாதியாயிருந்தவர்கள், காவலில் இருந்தவர்கள் இவர்களைக் குறித்து ராஜா விசாரிக்கிறவராக, கவலைப்படுகிறவராக இருக்கிறார். இவ்வுலகில் நாம் வாழும் போது இப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் விசாரித்து உள்ளோமா? உதவிகள் செய்துள்ளோமா? தேவன் நமக்கு எவ்வளவு கிருபைகளை, ஆசீர்வாதத்தைத் தந்துள்ளார். அதன் மூலமாக நாம் கிராமங்களில் தேவனுக்காகத் தியாகத்துடன் ஊழியம் செய்யும் ஊழியர்கள், ஏழை ஆதிவாசி பிள்ளைகள், நம்மைச் சுற்றி உள்ள ஜனங்களை நினைவுக் கூறுவோம். ஒருவேளை அடுத்தமாதம் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடும் நேரத்தில் இப்படிப்பட்டவர்களை நினைவு கூறலாம். நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் தேவன் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், திருமணம், கர்ப்பத்தின்கனி, வீட்டின் ஆசீர்வாதம் இவைகளைத் தரும்போது எளியவர்கள், கஷ்டப்படும் ஊழியர்கள், சபைகளை நினைவு கூறலாம். நாம் செய்கிற பல சின்ன சின்ன காரியங்களை நாம் மறந்து விடலாம். ஆனால் இயேசு ராஜா மறக்கமாட்டார். அவர் நினைவு வைத்து நம்மை ஆசீர்வதிப்பார். நம் சந்ததியையும் ஆசீர்வதிப்பார். இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் ஆசீர்வதிப்பார். தேவனால் மனிதனாகப் படைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் ஆண்டவருக்காக செய்தது ஆகும். **“அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.”** மத். 25 : 40 இந்த வசனத்தில் சொன்னபடி இயேசுவுக்காக நாம் பல காரியங்களைச் செய்வோம். அதன் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில் பரலோக ராஜ்யத்தின் காரியங்களைக் குறித்து 3 உவமைகள் மூலமாக 3 விதமாக ஆயத்தங்களை அழகாகக் கூறியுள்ளார். முதலாவதாக பத்து கன்னிகைகளின் உவமை. மத். 25 : 2ல் அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள் ஐந்து பேர் புத்தியற்றவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மணவாளன் வர தாமதித்தபோது எல்லாருமே நித்திரை மயக்கமாய் தூங்கிவிட்டார்கள். நினையாத நேரத்தில் மணவாளன் வந்தபோது புத்தியுள்ள கன்னிகைகள் ஆயத்தமானார்கள். தீவட்டிக்கு எண்ணெய் ஊற்றி தீபத்துடன் மணவாளனை வரவேற்க, பிரவேசிக்க ஆயத்தமானார்கள். மற்ற ஐந்து

பேர்களோ அசதியாக, நிர்விசாரமாக மற்றவர்களின் உதவியை நாடுகிறார்கள். கதவடைக்கப்படுகிறது.... ஆண்டவரே... ஆண்டவரே என்று கதறி அழுதும் பிரயோஜனமில்லை. அவர்கள் ஐந்து பேர்களும் அழைக்கப்பட்டார்கள்.

கிருபையாய் மணவாளனுடன் பிரவேசிக்க அனுமதி பெற்றவர்கள். ஆனால் ஆயத்தமாக இல்லையே? இன்றும் தேவன் நம்மை அழைத்துள்ளார். நம் வாழ்க்கையிலும் ஆயத்தமாக வாழ்கிறோமா? தேவன் தந்த இரட்சிப்பு, அபிஷேகம், ஊழியங்களை நிறைவாகக் காத்துக் கொண்டு இருக்கிறோமா? அனுதினம் ஜெபித்து, வேதம் வாசித்து பலிபீடத்தில் நம்மை பரிசுத்தப்படுத்துவதற்கு ஒப்புக் கொடுக்கிறோமா? அனுதினமும் பெற்ற அபிஷேகத்தை அனல் மூட்டி பாத்திரம் நிரம்பி வழியும்படியான அனுபவத்தில் உள்ளோமா? இல்லையெனில் இயேசுவை மறுதலித்த பேதுருவைப் போல, இயேசுவுடன் நெருக்கமாக இருந்த ஊழியத்திலிருந்து தூரமாக பின் செல்கிறோமா? நம்மை ஆராய்ந்து பார்ப்போம் அவரிடம் கிட்டிச் சேர்ந்து கிருபையால் பலப்பட்டு, வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாவோம்.

இரண்டாவதாக மத்தேயு 25 : 14–30 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். தேவன் இந்த உலக வாழ்வில் அனைவருக்கும் தாலந்துகளைக் கொடுத்துள்ளார். 5,2,1 எனக் கொடுத்தார். ஒன்றைக் கூட கொடுக்காமல் இல்லை. 5,2 தாலந்துகளைப் பெற்றவர்கள் எஜமான் வருவார் கணக்குக் கேட்பார் என்ற பயத்துடன் உண்மையாய் தாலந்துகளைப் பயன்படுத்தி இருமடங்காகப் பெருகச் செய்து எஜமானின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவன் பொல்லாதவனாக, சோம்பேறியாக நியாயத்தீர்ப்பைக் குறித்து பயமில்லாதவனாக எஜமான் வருவார் என்கிற நம்பிக்கை இல்லாதவனாக இன்னும் காலம் செல்லும் என நிர்விசாரமாக வாழ்ந்து தனக்குத் தந்த ஒரு தாலந்தையும் புதைத்து வைத்தான் எனக் காண்கிறோம்.

அடுத்தபடியாக, வேதம் சொல்கிறது நீ ஆயத்தப்படுவது மட்டுமின்றி உன்னோடுகூட இருப்பவர்களையும் ஆயத்தப்படுத்த வேண்டும். நோவா பேழையை ஆயத்தப்படுத்தினபோது முழுக்குடும்பத்தை ஆயத்தப்படுத்தினான். யோசேப்பு தன் குடும்பத்தார் 70 பேரையும் பஞ்சக் காலத்தில் மீட்டு பராமரித்தான். உலகில் நாம் மட்டுமல்ல பிறரையும் நம்முடையவர்களையும் ஆயத்தப்படுத்த வேண்டும்.

லூக்கா 8 : 26–40 வரை வாசித்துப்பாருங்கள் பிசாசு பிடித்த ஒருவனை இயேசு விடுதலையாக்கி, பூரண சுகத்தைப் பெறுகிறான். அவன் தன் ஊருக்குள்ளே சென்று வாழ்வதைக் காட்டிலும், இயேசுவிற்கு பின்னாகச் செல்வதை விரும்பினான். இயேசுவோ நீ திரும்ப உன் சொந்த ஜனத்தாரிடத்திற்குப் போ. கர்த்தர் உனக்குச் செய்த நன்மையை சாட்சியாக கூறு என்று அனுப்பினார். ஒரே மனிதன் கிராமம் முழுவதையும் ஆயத்தப்படுத்தினான்.

யோவான் 4ஆம் அதிகாரத்தில் சமாரியஸ்திரியைக் குறித்து வாசிக்கிறோம். அவள் இயேசுவே கிறிஸ்து என கண்டுகொண்டபின் உடனே குடத்தை வைத்துவிட்டு தன் சொந்தக் கிராமத்தில் உள்ள அனைவரிடமும், இயேசுவே உலக இரட்சகர் என்பதை அறிவித்தாள்.

பவுல் அப்போஸ்தலன் என் சொந்த இஸ்ரவேல் ஜனம் இரட்சிக்கப்பட வேண்டும் என சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சுவிசேஷத்தை அறிவித்தார். ஒரு கூட்ட சொந்த ஜனத்தை ஆயத்தப்படுத்தினார். அப்போஸ்தலன் தோமாவை தேவன் நம் பாரத தேசத்திற்கு அனுப்பி வைத்தார். முதல் நூற்றாண்டில் அநேக ஜனங்களை ஆயத்தப்படுத்தினார். இன்றைக்கு நமக்குத் தேவன் தந்த திருச்சபைகளுக்காகத் தேவனைத் துதிப்போம்.

நாம் எத்தனை குடும்பங்களை ஆதாயம் செய்கிறோம்? நம் மூலமாக எத்தனை ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு நம் சபையில் அங்கமாக இணைந்துள்ளார்கள்? இந்த உலகில் 70 வருடங்கள் 80 வருடங்கள் உயிரோடு வாழ்ந்து 70,80 ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தாமல் நாம் எப்படி தேவனை சந்திப்போம்? இப்போதே அறுவடைக்கு நிலங்கள் ஆயத்தமாக உள்ளது.

ஷாலோம் ஊழியத்தில் 23 வருடங்களை நிறைவு செய்தபோது, நம் ஷாலோம் சுதேச ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகள் 25 வருடங்களில் 25ஆம் ஆண்டு நிறைவு விழா காணும்போது ஆளுக்கு ஒரு சுதேச ஊழியர்களை அறிமுகப்படுத்துவோம். ஒவ்வொரு சபையும் ஒவ்வொரு கிளை சபைகளை உருவாக்குவோம் என்று அர்ப்பணித்தார்கள். ஒவ்வொரு விசுவாசியும் குறைந்தது 4 குடும்பங்களை தேவனண்டை அழைத்து ஆயத்தமாக்கத் தீர்மானம் செய்துள்ளார்கள். ஆக 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் 1000 ஊழியர்கள், 1000 சபைகள், 10 இலட்சம் ஆத்துமாக்களை தேவன் கட்டாயம் தருவார் என விசுவாசத்துடன் முன்னேறிச் செல்கிறோம்.

இதை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரியே, வட இந்தியாவில் தேவன் எழுப்புதலைத் தந்தபோதிலும் உங்களைச் சுற்றியுள்ள அநேக ஆத்துமாக்களை நினைவு கூறுங்கள். மாதம் ஒரு குடும்பத்திற்காவது சுவிசேஷம் சொல்லி சபையில் புதிய ஆத்துமாக்களை தேவனண்டை கொண்டு வருவோம். அந்திரேயா ஒரு பேதுருவை இயேசுவண்டை அழைத்து வந்தார். ஒரு பேதுருவோ 3000, 5000 பேர்களை ஆயத்தப்படுத்தினார். வெளி. 7 : 9ன் படி திரளான கூட்டத்தார் ஒவ்வொரு கோத்திரம், ஜாதிகள், ஜனங்களாக பரலோக இராஜ்ஜியத்தில் வருவதற்கு நம்முடனேக் கூட அநேகரை ஆயத்தப்படுத்துவோம்.

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி உங்கள் சபையில் இணைந்து புதிய ஆத்துமாக்களை கொண்டு வாருங்கள். பிறந்த நாள், திருமண நாள், கிறிஸ்துமஸ் போன்ற நாட்களை உங்களை சுற்றி இருப்பவர்கள், உடன் பணி புரிகிறவர்கள் உங்களுக்கு அறிமுகமானவர்களை அழைத்து உங்கள் சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கொள்வது மட்டுமின்றி சுவிசேஷத்தையும் அறிவித்து ஆயத்தப்படுத்தலாமே! யாரோ ஒரு சிலர் உங்களுக்காகக் காத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

மட்டுமல்ல ஆத்துமாக்களை தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு ஆயத்தப்படுத்தும் சுவிசேஷப் பணி மிஷனெரிப் பணிகளுடன் இணைந்துக் கொடுத்து, சுவிசேஷப் பணிகளில் உடன் பங்காளர்களாக மாறலாமே! அந்த ஆத்தும ஆதாயப் பணியால் நீங்களும் பலனைப் பெற்றுக் கொள்ளலாமே. எப்படியாவது சுவிசேஷத்தை நம்பாரத தேசத்திற்கு அறிவித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில் நம்மை இணைத்துக் கொள்வோம். ஜெபிப்போம்! ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம்! ஆத்தும ஆதாயப் பணிகளைத் தாங்குவோம்! ஒரே ஒரு வாழ்க்கை கிறிஸ்துவுக்காக வாழ்வோம்! ஆயத்தமாவோம் ஒரு கூட்ட ஜனங்களை கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக ஆயத்தப்படுத்துவோம்!

# கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆதிவாசி மக்கள் கொண்டாட உதவுங்கள்



**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி".** யோவான் 1:9

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல், அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்யக் கர்த்தர்தாமே பலப்படுத்துவாராக !

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலும் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 15 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் **ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு பீல் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ,** கிறிஸ்துமஸ் வெகுமதியாக அக்டோபர் அல்லது நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் ஊழியர், பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



*"...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". -இயேசு (மத்தேயு 25:40)*

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்-ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. நன்னு புரியா — போரடி**

லசுடி என்ற சகோதரி வயிற்று வலியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். மருத்துவம் செய்தும் எந்தபலனுமில்லாமல் ஜெபிக்கும்படியாக சபைக்கு அழைத்து வந்தார்கள் இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. குமன் டாமோர் — கரம்பா**

பூர்சிங் என்ற சகோதரனை தேள் கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது விஷத்தினை முறித்து தேவன் ஜீவனைப் பாதுகாத்தார்.

காந்தாபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. மிகவும் சோர்ந்து போன நிலையில் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் ஜீவனைக் காத்தார்.

**Pr. கோர்சிங் டாமோர் — புரக்குவா**

சகோ. அணில் என்பவர் ஒரு வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். இதற்காக ரூ. 10,000/—க்கும் அதிகமாக செலவு செய்து மருத்துவம் செய்தும் எந்த பலனுமில்லை. சபைக்கு அழைத்து வந்து ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்தும் வியாதிகளிலிருந்தும் அற்புத விடுதலையைக் கட்டளையிட்டார்.

**Pr. பச்சு பபேரியா — ராசரடா**

ராதா என்ற சகோதரி உதிரப்போக்கினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். எவ்வளவோ மருத்துவம் செய்தும் பலனில்லை. இறுதியாக ஜெபிக்கும்படியாக ஆலயத்திற்கு வந்தார். இங்கு சபையார் அனைவரும் சேர்ந்து ஜெபித்தபோது இயேசு கிறிஸ்துதாமே பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தர்சிங் வாக்லே — முன்கோசலா**

காந்தாபேன் என்ற சகோதரி கடந்த 5 ஆண்டுகளாக பிசாசின் பிடியினில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கட்டளையிட்டார்.

**Pr. பிசகாஷ் வாசுனியா — விசல்பூர்**

எங்கள் கிராமத்திலுள்ள 4 சிறுவர்கள் தம்பாக்கு போன்ற போதை பொருட்களுக்கு அடிமையாக இருந்தனர். இவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லியும் வசனங்களைக் கூறியும் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அவர்களை அந்த பாவ பழக்கங்களிலிருந்து மீட்டெடுத்தார்.

**Pr. பாரத் டாமோர் — தோலகக்ரா**

ரசலிபேன் என்ற சகோதரி தொடர்ந்து ஏற்பட்ட வாந்தியினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்து, இவருக்காகப் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. அணில் கனாவா — ஹிரோலா**

சாமாபாய் என்ற சகோதரர் காது கேட்காமல் மிகவும் கஷ்டப்பட்டுவந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் இவரது காதுகளைத் தொட்டு திறந்தார். இப்போது இவரால் நன்கு கேட்க முடிகிறது.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. காந்திலால் கராசியா பிலாடி**

காளிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படி சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தாஜு நக்வான் சாயிமாகுடி**

சோமலி என்ற சகோதரருக்கு தீடிரென கண் பார்வைத் தெரியாமல் போய்விட்டது. சபையில் விசுவாசிகள் அனைவரும் இணைந்து ஜெபித்தபோது, தேவன் அற்புதமாக கண்பார்வையைக் கொடுத்தார்.

**Pr. வோலாபேன் பாதர் டோடியார் பேடவ்**

மகேஷ் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை சபைக்கு அழைத்து வந்து ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலைக் கொடுத்தார்.

**Pr. சங்கர்லால் டோடியார் பாலாசின்தூர்**

சாரதா என்ற சகோதரி மஞ்சள் காமாலை வியாதியினால் கஷ்டப்பட்டார். அநேக இடங்களில் மந்திரக் கிரியைகள் செய்தும், மருத்துவங்கள் பார்த்தும் பலனில்லாமல் இறுதியாக சபைக்கு ஜெபிக்கும்படியாக வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக மஞ்சள் காமாலை நோயிலிருந்து சுகத்தினைக் கொடுத்தார்.

**Pr. ஈஸ்வர்லால் டாமோர் சத்தாலியா**

எங்கள் கிராமத்தைச் சேர்ந்த ஹஜ்னி என்ற சகோதரியையும், அஸ்வின் என்ற சகோதரனையும் தேள் கடித்துவிட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களை சபைக்கு அழைத்து வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. துலேஷ்வர் கராசியா ஹெய்யா மோக்ஜி**

பாரதா என்ற சகோதரன் டி.பி. வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். ரூ. 15 ஆயிரம் வரை செலவு செய்து மருத்துவம் பார்த்தும் பலனில்லாமல் இறுதியாக ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக கொண்டு வந்தார்கள். அவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. காத்து சாரேல் காச்சலா**

பூனிபேன் என்ற சகோதரிக்கு தீடிரென கண்பார்வை தெரியாமல் போனது. மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் இவரது கண்களைத் தொட்டு நல்ல பார்வையினைக் கொடுத்தார்.

**Pr. பிரபுலால் கட்டாரா வீர்பூர்**

ராஜாபேன் என்ற குழந்தை பேச முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டது. ஜெபிக்கும்படியாக சபைக்கு அழைத்து வந்தார்கள். இதற்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக பேச வைத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. தும்லா கார்ட் வல்பூர்**

ஜம்கு என்ற சகோதரியின் குடும்பத்தில் அனைவரும் மந்திரக் கிரியைகள் செய்பவர்கள். இதனால் இந்த சகோதரி 5 வருடமாக வயிற்றில் ஏற்பட்ட கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் செய்தும் பலனில்லாமல் நமது ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைப் பெற்ற இவர்கள் குடும்பத்தில் அனைவரும் மந்திரக் கிரியைகளை விட்டுவிட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

ஹக்ரி என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு, நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். மருத்துவத்திற்காக ரூ. 50 ஆயிரத்திற்கும் அதிகமாகச் செலவு செய்தும், பலனில்லாதக் காரணத்தால் இறுதியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு சபையார் அனைவரும் இணைந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுதக்தைக் கொடுத்தார்.

**Pr. அஜ்மீர் டாமோர் சாம்னாதார்**

ரம்தா என்ற சகோதரி குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக விஷத்தை அருந்தினார். இதனால் சுய நினைவு இல்லாமல் இருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக ஜீவனைப் பாதுகாத்து ஆசீர்வதித்தார்.

**Pr. தும்லா கார்ட் வல்பூர்**

அணில் என்ற சகோதரர் கடந்த 10 ஆண்டுகளாக பிசாசின் போராட்டத்தில் சிக்கி மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். மருத்துவங்கள் மற்றும் மந்திரங்கள் செய்தும் பலனில்லாமல், சோர்ந்து போன நேரத்தில் இவருக்காக ஜெபித்தபோது கர்த்தர் அற்புதமாக பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. தன்சிங் வாசுனியா சாலமவுடா**

கமலி என்ற சகோதரி சரீர பெலவீனத்தினால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் கஷ்டப்பட்டார். மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. இறுதியாக சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது கிறிஸ்துதாமே அற்புத சுகத்தைக் கொடுத்து நடக்கச் செய்தார்.

**Pr. துபா மெய்டா நகர்புரா**

மான்சிங் என்ற 22 வயது சகோதரன் 3 ஆண்டுகளாக குடிப் பழக்கத்திற்கு மிகவும் அடிமையாக இருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படி ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்து வேத வசனத்தைக் கூறியபோது தேவன் அற்புதமாக குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. சந்து அடா மெசால்**

நூரா என்ற சகோதரி உதிரப் போக்கு வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவம் பார்த்தும் குணமாகாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

## பத்து லட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சுகமளிக்கும் ஆராதனைகளில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் ஒரு சில...



பெயர் : **பதமிலால் டாமோர்,** ஊர் : சோக்புரா, இராஜஸ்தான்

எனது பெயர் பதமிலால் டாமோர். நான் சோக்புரா கிராமத்தைச் சேர்ந்தவன். எனக்கு இருமல் வரும்போது அவ்வப்போது வாயிலிருந்து இரத்தம் வரும். இப்படியாக நான் 2 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டேன். எனது சுகத்திற்காக எவ்வளவோ மந்திரவாதிகளிடம் சென்றும், மருத்துவர்களைப் பார்த்தும் ஒரு பலனுமில்லை. ஒரு முறை சுடாத்தா கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அங்கு தேவ ஊழியர் அளித்த செய்தியின் மூலம் எனக்குள் விசுவாசம் வந்தது. கூட்டத்தின் இறுதியில் ஊழியர் ஜெபித்த போது எனக்கு சுகம் கிடைத்தது. இப்போது எனக்கு வாயிலிருந்து இரத்தம் வருவதும் நின்று விட்டது. தற்போது நான் பரிபூரண சுகம் பெற்றுள்ளேன். எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

---



பெயர் : **ராஜேஸ்வரி,** ஊர் : முண்டஹேடா, குஜராத்

எனது பெயர் ராஜேஸ்வரி. நான் முண்டஹேடா கிராமத்தைச் சேர்ந்தவள். சிறு வயதிலிருந்தே எனது மகளுக்கு திடீரென்று வலிப்பு வந்து விடும். வலிப்பு வரும் நேரமெல்லாம் அவள் வாயிலிருந்து இரத்தம் வரும். இப்படியாக மிகவும் கஷ்டப்பட்டாள். இவளது சுகத்திற்காக மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் ஒரு மாற்றமுமில்லை. இந்நிலையில் பாரேவா கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தைக் குறித்து கேள்விப்பட்டு, எனது மகளை அழைத்துச் சென்றேன்.

கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் போது திடீரென்று வலிப்பு வந்து விட்டது. வாயிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்து விட்டது. சிறிது நேரம் கழித்து மூச்சுப் பேச்சில்லாமல் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக இருந்தாள். நான் அவள் மரித்து விட்டாள் என்று அழ ஆரம்பித்து விட்டேன். அப்போது ஊழியர்கள் ஒன்றாக இணைந்து ஜெபித்தார்கள். அரை மணி நேரம் கழித்து எனது மகள் கண்களைத் திறந்தாள். ஜெபத்தின் மூலம் தேவன் சுகத்தைக் கொடுத்தார். அதிலிருந்து அவளுக்கு வலிப்பு வருவதே நின்று விட்டது. தற்போது அவள் சுகமாக இருக்கிறாள். தேவனுக்கே மகிமை!

---




பெயர் : **ரேகா பேன்,** ஊர் : பமன் செமலியா, மத்தியப்பிரதேசம்

எனக்கு 2 மாதமாக தொடர்ந்து இரத்தப் போக்கு இருந்தது. சுகத்திற்காக எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். அங்கு ஊழியர் ஜெபித்த போது எனக்குப் பரிபூரண சுகம் கிடைத்தது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

சுதேச ஊழியரின் சாட்சி

*போதகர்.* **ஹிராலால் கட்டாரா**

நவபாடா – பாட்லா (கல்வானி), இராஜஸ்தான்



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் ஹிராலால் கட்டாரா. நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ள (நவபாடா) பாட்லா (கல்வானி) கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன்.

நான் இயேசுவை அறியாததற்கு முன் மந்திரக் கிரியைகள் செய்வதுதான் எனது தொழிலாகும். இதனால் நான் பிசாசின் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டேன். இதின் நிமித்தமாக என்னுடைய சரீரத்தில் எரிச்சல் வந்து அதிக வேதனைப்பட்டேன். பின்பு சுகத்திற்காக மற்ற மந்திரவாதிகளையும் மருத்துவர்களையும் நாடி பயனற்று போனேன். சமாதானமில்லாமல் அங்கும் இங்கும் அலைந்துக் கொண்டிருந்தேன். 1995–ம் வருடம் ஒரு ஷாலோம் சுதேச ஊழியர் மூலமாக இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவர்கள் நடத்துகிற கூட்டத்திற்குச் சென்று பங்கு பெற்றேன். அங்கு ஊழியர் எனக்காக பாரத்தோடு ஜெபித்தார். அந்த நேரத்தில் என் மேலிருந்து அசுத்த ஆவிகளை தேவன் விரட்டியடித்து எனக்கு பூரண விடுதலைக் கொடுத்தார். சரீரத்திலும் நல்ல சுகம் கிடைத்தது. அதினிமித்தம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபையில் இணைந்து விசுவாசத்தில் வளர்ந்து வந்தேன்.

அதன் பின் 2000–ல் நான் தனித்து ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவன் தரிசனத்தில் என்னோடு பேசினார். அந்நேரத்தில் எனது கிராமத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் கூடி ஆராதிக்கும் அளவிற்கு ஆலயம் கட்ட வேண்டுமென்ற பாரத்தினை தேவன் எனக்குள் தந்தார். அதன் பின் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஊழியம் செய்யும்படியாக என்னை அர்ப்பணித்து, ஒரு மாத ஊழியப்பயிற்சி பெற்று, தற்போது எனது சொந்த கிராமமாகிய பாட்லாவில் (நவபாடா) ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்.

B.Th படிப்பை முடித்து, நான் போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஷாலோம் சபையின் போதகராக ஊழியம் செய்து வருகிறேன். விரைவில் 5000 ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டு மென்ற வாஞ்சையோடு, முழுக்கிராமமும் சந்திக்கப்பட வேண்டுமென்ற தரிசனத்தோடு ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும் எனது ஊழியம் மற்றும் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Rev. D. மோகன்,** N.L.A.G. Church, Chennai.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## *பெண்கள் பண்டிகை – கன்வென்ஷன் கூட்டங்கள் (மும்பை பட்டணம்)*

தேவனுடைய பெரிதான கிருபையினால் மும்பை பாண்டுப் வெஸ்ட் என்ற பகுதியிலுள்ள மெத்தடிஸ்ட் தமிழ் திருச்சபையில் 15.08.2014 வெள்ளி அன்று நடைபெற்ற பெண்கள் பண்டிகையிலும், 16.08.2014 & 17.08.2014 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களும் மாலையில் நடைபெற்ற கன்வென்ஷன் கூட்டங்களிலும், 17.08.2014 ஞாயிறு ஆராதனையிலும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

இந்தக் கூட்டங்களிலும், ஆராதனையிலும் தேவன் சகோதரியை வல்லமையாகப் பயன்படுத்தினார். தேவ ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். பெண்கள் மத்தியில் ஒரு எழுப்புதலைக் கட்டளையிட்டார். **தேவனுக்கே மகிமை!** மேலும், சகோதரியை அழைத்து பயன்படுத்திய திருச்சபை **போதகர் Rev. S. சார்லஸ் மணி** அவர்களுக்காகவும், **பெண்கள் ஐக்கிய சங்கத்திற்காகவும்** தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

மேற்கண்ட கூடுகைகளுக்கான புகைப்படங்களை 34ம் பக்கத்தில் பார்க்கவும்...

---

## தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்!

கர்த்தருடைய பெரிதான கிருபையால், கன்னியாகுமரி மாவட்டம், விரிகோடு சி.எஸ்.ஐ. ஆலயத்தில் ஆண்கள் ஐக்கிய சங்க நற்செய்திப் பெருவிழா 18.09.2014 வியாழன் முதல் 21.09.2014 ஞாயிறு முடிய வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் நம்முடைய ஷாலோம் ஊழியர்கள் **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. ஆலன், சகோ. ரதிஷ்குமார், சகோ. இராஜமாணிக்கம்** ஆகியோர் உடன் சென்றனர். இம்மூன்று நாள் இரவுக் கூட்டங்களிலும் **சகோ. ஆலன், சகோ. ரதிஷ்குமார்** பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை நடத்த, **சகோ. இராஜமாணிக்கம்** அவர்கள் இசைக்கருவியை மீட்டினார். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவனுடைய செய்தியை வல்லமையாகக் கொடுத்தார்கள். சபை மக்கள் உற்சாகமாய் களிகூர்ந்தார்கள்.

வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் பகல் கூட்டங்கள் நடைபெற்றன. விசேஷமாக ஞாயிறு காலை ஆராதனையிலும், மதியம் வாலிபர் கூட்டங்களிலும் நமது ஊழியர்களை கர்த்தர் மிகவும் வல்லமையாகப் பயன்படுத்தினார். ஷாலோம் ஊழிய பகிர்வை **சகோ. ஆலன்** அவர்கள் சிறப்பாகச் செய்தார்கள். இக்கூட்டங்களை எல்லாம் மார்த்தாண்டம் ஷாலோம் கிளை அலுவலர் **சகோ. செல்வதுரை** அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். சபை போதகர் **Rev. ஜெயா காலின்ஸ்** அவர்கள் தலைமையில் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றது. இச்சபையின் ஆண்கள் ஐக்கிய சங்க உறுப்பினர்கள் நம் ஊழியர்களை கனிவாக உபசரித்தனர். குறிப்பாக **சகோ. ஜெயசிங்** குடும்பத்தார் நம் ஊழியர்களுக்கு அவர்கள் இல்லத்தில் தங்க இடம் கொடுத்து உபசரித்தார்கள். கர்த்தர் தாமே இக்கூட்டங்களுக்காக ஜெபித்த, கொடுத்த, உழைத்த அனைவரையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

மேலும், சனிக்கிழமை மார்த்தாண்டம் **A.G. சபையில்** நடைபெற்ற பகல் கூட்டத்தில் **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ், சகோ. ஆலன்** இவர்கள் இருவரும் கலந்துக் கொண்டு சிறப்பு செய்தியும், பாடல் ஆராதனையும் நடத்தி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை **போதகர் Pr. ஆமோஸ்** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்!

# ஷாலோம் நாகர்கோவில் கிளை அலுவலகம் திறப்பு விழா

ஷாலோம் ஊழியங்கள் கடந்த 24 ஆண்டுகளாக பீல் மக்கள் மத்தியில் சிறப்பாக நிறைவேறி வருகிறது. இதன் முன்னேற்றப் பணிகளில் ஷாலோம் ஊழியர்களும், தன்னார்வத் தொண்டர்களும் செயல்பட்டு வருகின்றனர். மேலும், ஒரு சில ஊர்களில் கிளை அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படியும், நீண்ட நாட்களாக ஏறெடுத்த ஜெபத்திற்கு தேவன் கொடுத்த பதிலாகவும் கடந்த **21.09.2014** அன்று மாலை நாகர்கோவிலில் **ஷாலோம் கிளை அலுவலகம்** திறக்கப்பட தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. குணம்ஸ்** அவர்கள் சிறப்பு ஜெபத்தினை ஏறெடுக்க, **பிஷப். வே. தேவதாஸ்** அவர்கள் ஜெபித்துத் திறந்து வைத்தார்கள். இதில் ஷாலோம் ஊழியர்களும், ஷாலோம் ஆதரவாளர்களும் அநேகர் வந்துக் கலந்துக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இதில் **சகோ. N. ஜாண்சன்** அவர்களும், **சகோதரி. J. ரெட்லின் சுதா** அவர்களும், ஷாலோம் பணித்தளங்களில் ஆலயம் கட்டும்படியாக முதல் காணிக்கைகளைக் கொடுத்தனர். அவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

இந்த அலுவலகத்தில் இருந்து செயலாற்றும்படியாக, **சகோதரி. ஜெயந்தா** அவர்கள் தங்களை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்கள். இந்தக் கிளை அலுவலகம் தங்களுக்காக, ஜெபிக்கும்படியாக **காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை** திறந்திருக்கும். மேலும், மிஷனெரி பணிகளுக்காக காணிக்கைகள் கொடுக்க விரும்பும் ஆதரவாளர்கள் இந்த கிளை அலுவலகத்திற்கு வந்து செலுத்த அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**நாகர்கோவில்**
**கிளை அலுவலக முகவரி**

**SHARING LOVE MISSION**
**Shalom Branch Office,**
Ebenezer Plaza, Parama Street, WCC Junction,
Nagercoil - 629 001 Ph : 9698444522

# ஷாலோம் பங்காளர் குடும்ப ஆசீர்வாதக் கூடுகை – 21.09.2014 (நாகர்கோவில்)

கடந்த 21.09.2014 ஞாயிறு அன்று மாலை நாகர்கோவில் பகுதி ஷாலோம் பங்காளர்களுக்கான குடும்ப ஆசீர்வாதக் கூடுகை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூடுகையில் **சகோ. செல்வதுரை** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையினை நடத்தினதோடு, **சகோ. சுந்தர்ராஜ்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதன் பின்பு **பிஷப். வே. தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தக் காரியங்களையும் பகிர்ந்துக் கொண்டு, தேவனுடைய வார்த்தையைக் கூறி, வந்த அனைவருக்காகவும் ஜெபித்தார்கள். அன்றைய தினத்தில் **6 புதிய தன்னார்வத் தொண்டர்கள்** ஷாலோம் பிரதிநிதியாக செயல்பட முன்வந்துள்ளார்கள். மேலும், **சகோதரி. ரமோலா S.** பாபு அவர்கள் பணித்தளம் சென்று வந்த அனுபவத்தைப் பகிர்ந்துக் கொண்டு வந்திருந்த ஜனங்களுக்கு ஆத்தும பாரத்தை ஏற்படுத்தினார்கள். மேலும், **சகோ. N. ஜாண்சன்** அவர்கள் ஷாலோம் ஊழியத்தில் தன்னார்வமாக செயல்பட்டதன் மூலமாக தேவன் தனது குடும்பத்தை ஆசீர்வதித்ததை சாட்சியாகப் பகிர்ந்துக் கொண்டார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது!!

# ஷாலோம் நாகர்கோவில் கிளை அலுவலகம் திறப்பு விழா - 21.09.2014



ஆயத்த ஜெபத்தினை ஏறெடுக்கும் சகோ. வேதமுத்து அவர்கள்



அலுவலகத்தை ஜெபித்துத் திறந்து வைக்கும் பேராயர் வே. தேவதாஸ் அவர்கள்



சிறப்பு ஜெபத்தினை ஏறெடுக்கும் சகோ. குணம்ஸ் அவர்கள்



ஷாலோம் அலுவலக ஊழியர்கள் அறிமுகம்

# ஷாலோம் பங்காளர் குடும்ப ஆசீர்வாத கூடுகை - நாகர்கோவில்- 21.09.2014



சிறப்புச் செய்தியளிக்கும் பேராயர் வே. தேவதாஸ் அவர்கள்



வாழ்த்துரை வழங்கும் சகோ. சுந்தர்ராஜ் அவர்கள்



பணித்தள பகிர்வு : சகோதரி ரமோலா S. பாபு அவர்கள்



கூடியிருந்த தேவ ஜனங்கள்

# Covai St. Paul's School நிறுவனர்
# Rev. டேவிட் அவர்களின் பணித்தள வருகை



ம.பி. நெகடியா கிராம ஆலயப் பிரதிஷ்டை வேளை




ம.பி. நெகடியா கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



ம.பி. நெகடியா கிராம சபையில் தேவனுடைய வார்த்தை – Rev. டேவிட் அவர்கள்




பாட்டன்புரா கிராம சபையில் – தேவசெய்தி



கோய்க்கா கிராம சபையில் – தேவ செய்தி



கோய்க்கா கிராம ஆலய ஆராதனையில் பங்கு பெற்ற விசுவாசிகள்




கொலானா கிராம ஆலயத்திற்கு முன்பு




கும்புரா கிராம ஆலயத்திற்கு முன்பு



### ஷாலோம் கிராம ஆலயம்

# நெகடியா

### மத்தியப்பிரதேசம்

மத்தியபிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் நெகடியா என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்திலுள்ள மக்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவும், மந்திரவாதத்தை நம்புகிறவர்களாகவும், கிறிஸ்தவர்களை விரோதிக்கிறவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. கேம்சந்த் குன்டியா அவர்கள் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி, தம்பாக்கு, சண்டை போடுவது, திருடுவது என பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

இவரின் மனைவி 6 மாதமாக வியாதியினால் கஷ்டப்பட்டார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. அதன் பின் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு, ஷாலோம் ஊழியர் ரமேஷ் வசுனியா அவர்களிடம் இவரின் மனைவியை ஜெபிப்பதற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்த போது இவரது மனைவிக்கு சுகம் கிடைத்தது. அதன் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ஷாலோம் ஊழியர் சகோ. ரமேஷ் வசுனியா அவர்கள் சகோ. கேம்சந்த் பாயின் வீட்டிலேயே கூட்டம் நடத்த ஆரம்பித்தார். அதில் கேம்சந்த் பாயின் குடும்பத்தினர் மட்டுமே பங்கு பெற்றனர். பின்பு இந்த கூட்டத்திற்கு விரோதமாக அதிக எதிர்ப்புகளை சந்திக்க நேரிட்டது.

ஆனாலும் கர்த்தர் இவர்களோடு கூட இருந்தார். ஒரு முறை ஆஸ்துமா வியாதியினால் கஷ்டப்பட்ட ஒரு சகோதரி இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்றார்கள். அவர்களுக்காக ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் அநேக ஆத்துமாக்கள் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். பின்பு கேம்சந்த் குன்டியா அவர்கள் தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஒரு மாத ஊழியப்பயிற்சி பெற்று, 2005–ம் வருடத்திருந்து இந்த சபையை பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்தார்.

இவர் கிராமம் முழுவதும் நடந்தே சென்று வீடு வீடாக சுவிசேஷம் அறிவித்தார். இவர் மூலம் தேவன் அநேக அற்புத அடையாளங்களை நடப்பித்தார். இதன் மூலம் சபை வளர்ந்தது. தற்போது 80 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள். இப்பொழுது இந்த ஊழியர் காணிக்கையாகக் கொடுத்த தனது சொந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஒரு ஆலயம் கட்டப்பட்டு, பேராயர். தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க 08–10–2014 அன்று Rev. டேவிட், கோயம்புத்தூர் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

இந்த ஆலயம் கோயம்புத்தூர் St. Paul's School நிறுவனர் Rev. டேவிட், அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டுள்ளது.

**ரூ. 2 இலட்சங்கள் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# ஷாலோம் மிஷன் ஞாயிறு



பாட்டன்புரா கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



ஜெரி கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



தெல்சர் கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



சொக்வாடா கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



உதய்பூரா கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



விசல்பூர் கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



பேடவ் கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



ஜும்புரா கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்



மகர்தா கிராம ஆலயத்தில் தேவ ஜனங்கள் படைத்த காணிக்கைகள்

# ஷாலோம் மிஷன் ஞாயிறு சிறப்பு ஆராதனைகள்
## *2014 அக்டோபர் 5,12&19*

1991ம் ஆண்டு ஜுலை 1ம் தேதி ஷாலோம் ஊழியம் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் தந்த தரிசனத்துடன் குஜராத் மாநிலம் ஜாலோத் ஊரில் பேய் பங்களா என்று அழைக்கப்பட்ட வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று ஆரம்பிக்கப்பட்ட ஜெபக் கூடுகையில் 2 குடும்பங்கள் பங்கு பெற்று அற்புத விடுதலை பெற்றார்கள். அற்ப ஆரம்பம் பலநூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொள்ள, தேவன் சுதேச ஊழியர்களை எழுப்ப பாரம் தந்து 500க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்கள் பயிற்சி பெற்று அவர்கள் மூலமாக ஆயிரமாயிரம் விசுவாசக் குடும்பங்களைத் தந்துள்ளார். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

ஷாலோம் திருச்சபை, சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஜெபிக்கிற சபையாகவும், நம் தலைமுறையில் நம் பீல் ஆதிவாசிகள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆத்துமா பாரத்துடன் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் சபைகளாகவும், தாங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் தேவனுக்காக மிஷனெரி பணிக்காகக் கொடுக்கும் சபைகளாகவும் உருவாக்கி தேவன் தந்த தரிசனப் பணியை பீல் விசுவாசிகள் மூலமாக நிறைவேற்றி வருகிறது.

ஒவ்வொரு வருடமும் ஷாலோம் மிஷனெரி ஞாயிறு என அக்டோபர் மாதத்தில் அனைத்து சபைகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்தை தேவன் பயன்படுத்தி வருவதற்காகத் துதித்து, ஜெபித்துத் தங்களையும், சபைகளையும் அர்ப்பணிப்பார்கள். மட்டுமல்லாமல் ஷாலோம் மிஷனெரி பணிக்காக 5 அப்பங்கள் 2 மீனை சிறுபையன் தேவனுக்காகக் கொடுத்ததுபோல தங்கள் பலனான மக்காசோளம், தானியங்கள் மற்றும் கூலி வேலை செய்த பணத்திலிருந்தும் உதாரத்துவமான காணிக்கைகளைப் படைப்பார்கள். இவ்வருடமும் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் அக்டோபர் 5,12&19 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் உற்சாகமாக ஆசரிக்கப்பட்டது.

**பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஹிரோலா, கங்கேலா (குஜராத்), பிட்டோல் (மத்தியபிரதேசம்), பேடவ், டெபிரி (இராஜஸ்தான்) ஆகிய இடங்களிலும், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் அந்தர்வேலியா (மத்தியபிரதேசம்), கும்புரா (இராஜஸ்தான்) ஆகிய இடங்களிலும், **சகோ. டைட்டஸ்** அவர்கள் ஜெரி (குஜராத்), முண்டத் (மத்தியபிரதேசம்), மகர்தா (இராஜஸ்தான்) ஆகிய இடங்களிலும் ஆராதனைகளில் கலந்துக் கொண்டார்கள். அனைத்து பணித்தள அலுவலக ஊழியர்களும் ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்றார்கள். ஷாலோம் ஊழியத்திற்கென்று பீல் ஆதிவாசி விசுவாசிகள் உற்சாகமாக ரூ. 25 இலட்சங்களுக்கும் அதிகமாக காணிக்கையை தேவ நாமம் மகிமைப்பட படைத்தார்கள்.

இவ்வருட ஊழியத் தேவை ரூ. 5 கோடி நிதிக்காக பீல் மக்கள் தந்த காணிக்கைக்காக தேவனைத் துதிப்போம். வெகு விரைவில் ஷாலோம் சபைகள் ஸ்திர சபைகளாக உருவாகி, மிஷனெரிகளை தாங்க மீதியான சொந்த ஜனங்களை தேவனண்டை நடத்தவும், வட இந்தியாவிற்கு ஷாலோம் சபைகள் ஜெபித்து அனுப்பும், தாங்கும் சபைகளாக விளங்கவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எல்லா துதி, கனம், மகிமை தேவனுக்கே செலுத்துகிறோம். ஜெபித்த யாவருக்கும் எங்கள் நன்றியைக் கூறுகிறோம்.

# கிறிஸ்துவின் நண்பர்கள் - இந்தியா (மும்பை)

## குழுவினரின் பணித்தள வருகை

தேவ கிருபையால் மும்பையில் உள்ள எங்கள் ஊழிய அமைப்பாகிய கிறிஸ்துவின் நண்பர்கள் இந்திய – மும்பை ஷாலோம் முன்னேற்ற பணியாளர் **சகோ. பிரபாகரன்** உடன் இணைந்து 5 பேர்கள் குழுவாக அக்டோபர் 11,12 ஆகிய தேதிகளில் ஷாலோம் பணித்தளங்களை பார்வையிட கிருபைத் தந்தார்.

அக்டோபர் 11ஆம் தேதி அன்று மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் குவாலி, பத்ரா, நவபாடா, மான்லி, ரூபாகேடா, ஜெரி, ராசர்டா, குந்திகேடா, தனுஷ்யா, போர்டி ஆகிய பணித்தளத்திலுள்ள ஆலயங்களைக் காணவும், பீல் சுதேச ஊழியர்களைக் காணவும் தேவன் கிருபைச் செய்தார்.

அக்டோபர் 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று குஜராத்திலுள்ள வரம்கேடா, பாட்டன்பூரா, கங்கேலா ஆகிய ஆலயங்களில் 3 குழுவாக பிரிந்து தேவ செய்தியை பகிர்ந்துக் கொண்டோம். **சகோ. ஸ்ரீதர், சகோ. அன்டோனி, சகோ. அருண் மனுவேல்,** தேவ செய்தியைப் பகிர்ந்தார்கள். **சகோ. ராஜன்** மற்றும் **சகோ. கணேஷ்** தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபரிவிதமான ஆசீர்வாதங்கள் ஊற்றப்பட்டது. அனைவருக்கும் தனித்தனியாக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. எங்களை அழைத்துச் சென்ற **சகோ. சாமுவேல்** அவர்கள் 23 வருட ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டார்கள். மாலையில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்தைச் சந்தித்து ஊழியங்களை குறித்துப் பகிர்ந்துக் கொள்ள, ஜெபிக்க தேவன் கிருபைச் செய்தார்.

குடித்து வெறித்து, கொள்ளையடித்து, அசுத்த ஆவியில் சிக்குண்ட இந்த பீல் மக்கள் மத்தியில் 23 வருடங்கள் **பேராயர். தேவதாஸ்** அவர்களுக்கு கொடுத்த தரிசனத்தை தேவன் தந்த 500க்கும் அதிகமான சுதேச ஊழியர்களை உருவாக்கி, சபைகளை ஸ்தாபித்தது ஆச்சரியமான காரியமாகும். அனைத்து சபைகளில் விசுவாசிகள் ஆடிப்பாடி, துதித்து, ஆவியில் நிரம்பி ஜெபிப்பதையும், பீல் சுதேச ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஊழியத்தைக் கண்டு தேவனைத் துதித்தோம்.

2016ஆம் ஆண்டுக்குள் (25 ஆண்டு நிறைவு) 1000 சுதேச ஊழியர்கள், 1000 சபைகள், இலட்ச குடும்பங்களை ஆத்தும ஆதாயம் செய்தல் என்ற தரிசனத்தோடு ஊழியம் செய்துவரும் இந்த ஷாலோம் மிஷனெரி பணிகளுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கவும், இந்த மிஷனெரி பணிகளைத் தாங்கவும் முன்வந்துள்ளோம். மட்டுமன்றி அநேகருக்கு இந்த ஊழியங்களை அறிமுகம் செய்யவும் தீர்மானித்தோம். 1 கோடி பீல் மக்கள் வாழும் 7000 கிராமங்களில் இரட்சிப்பின் பணிக்காக தேவனுடைய தரிசன அழைப்பை நிறைவேற்றும் **பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக** அனுதினமும் ஜெபித்து நம்மால் முடிந்த அளவு ஊழியத்தைத் தாங்க அர்ப்பணியுங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

பணித்தள பார்வைக்கான புகைப்படங்களை 1ம் பக்கத்தில் பார்க்கவும்... Friends of Christ- India (Mumbai)



## Rev. Dr. V. டேவிட்

Chairman :
St. Paul's Arts & Science College For Women & St. Paul's Matric & Hr. Sec. School, Coimbatore - 25

# சிறப்பு பணித்தள ஊழிய அறிக்கை

அக்டோபர் மாதம் 6,7,8 (திங்கள், செவ்வாய், புதன்) ஆகிய 3 நாட்கள் கீழே குறிக்கப்பட்டுள்ள ஷாலோம் மிஷனெரி பணித்தளங்களை பார்வையிட தேவன் கிருபைச் செய்தார்.

முதல் நாள் திங்கட்கிழமை குஜராத் மாநிலத்தில் பாரேவா, கொலானா, ஹிரோலா ஜாலோத் மற்றும் இராஜஸ்தானில் கும்புரா, கதேடியா ஆகிய பணித்தளங்களையும், அங்கு கட்டப்பட்டுள்ள ஆலயங்களையும் பார்த்து விட்டு, குறிப்பாக கோய்கா பேராலயத்தில் நடைபெற்ற மூப்பர்களுக்கான கூட்டத்தில் செய்தி கொடுத்தேன். இதில் சுமார் 300 பேர் கலந்துக் கொண்டார்கள்.

இரண்டாவது நாள் செவ்வாய்கிழமை குஜராத்தில் வரம்கேடா கிராமத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு கிராம ஆலயங்களைப் பார்த்துவிட்டு, பாட்டன்புரா கிராம ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் செய்தி கொடுத்தேன். இதில் 300 பேர்களுக்கும் அதிகமானோர் கலந்துக் கொண்டனர்.

மூன்றாவது நாள் புதன்கிழமை மத்தியப்பிரதேசத்தில் காளாகேத், தெல்சர், துவாலி, பத்ரா, மான்ட்லி, நவாபாடா ஆகிய பணித்தளங்களில் கட்டப்பட்டள்ள கிராம ஆலயங்களைப் பார்த்துவிட்டு, நெகடியா என்ற கிராமத்தில் **எங்கள் குடும்பத்தின் சார்பில் கட்டிக் கொடுத்துள்ள** ஆலயத்தைத் திறந்து வைத்து அவ்வாராதனையில் செய்திக் கொடுக்க தேவன் கிருபைச் செய்தார். ஆலயம் நிரம்பி வழியத்தக்கதாக விசுவாசிகள் பங்கெடுத்தார்கள்.

மேலும் அந்தர்வேலியா மையத்தில் உள்ள ஆலயத்தையும் அங்குள்ள மத்தியப்பிரதேச மூத்த சுதேச ஊழியர்களுடைய அர்ப்பணிப்பான தலைமைத்துவ ஊழியத்தைக் காண முடிந்தது. இந்த மூன்று நாட்களும் மொத்தம் மூன்று மாநிலங்களிலும் 18 பணித்தளங்களையும் அங்குள்ள ஆலயங்களையும் பார்வையிட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் இருந்தது.

**பேராயர். தேவதாஸ்** அவர்கள் தன் மனைவி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுடன் சேர்ந்து மிகச் சிறிய அளவில் 23 வருடங்களுக்கு முன் ஆரம்பித்த ஊழியத்தின் மூலம் தற்சமயம் சுமார் 23 ஆயிரம் குடும்பங்கள் (கிட்டத்தட்ட 1,20,000 பேர்) இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்து தேவனை ஆராதித்து வருகிறார்கள். அவர்களால் கிட்டத்தட்ட 260 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்பான ஒரு காரியமாகும். அதுவும் மிகவும் பின்தங்கிய Interior இடங்களிலும், மலைகளிலும் ஆலயங்கள் எழுப்பப்பட்டிருந்தது எனக்கே மிகவும் ஆச்சரியத்தையும், சந்தோசத்தையும் கொடுத்தது. தென் இந்திய மிஷனெரி யாருமே இல்லாமல் சுதேச ஊழியர்களைக் கொண்டே இந்த காரியங்களை அவர்கள் தேவ ஒத்தாசையோடு செய்திருப்பது மிகமிக ஆச்சரியமான ஒன்று.

இவ்வூழியம் நடைபெற்ற 23 ஆண்டு காலத்தில் 520 சுதேச ஊழியர்கள் உருவாகி இருப்பதும், அவர்கள் மூலமாக 600க்கும் அதிகமான இடங்களில் ஆராதனை குழுக்கள் செயல்படுவதும் தேவன் செய்திருக்கிற ஒரு மகத்தான கிரியையாகும். அதுவும் ஊழியத்திற்கு

மிகவும் எதிர்ப்புகள் நிறைந்த மத்திய பிரதேசம், குஜராத், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இவ்வூழியம் சிறப்பாக நடைபெறுவது மிகவும் பாராட்டத்தக்க ஒரு காரியமாகும்.

என்னுடைய 2வது நாள் பணித்தள விஜயத்தில் பாட்டன்புரா கிராம ஆலயத்தில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் நடத்திய ஆராதனை என்னை மிகவும் ஆச்சரியப்படுத்திய காரியங்களில் ஒன்றாகும். அவ்வாராதனையில் பீல் மக்கள் நடனமாடி தேவனை ஆராதித்த முறை மிகமிக சிறப்பாக இருந்தது.

ஷாலோம் மிஷன் இயக்கம் செயல்படும் விதமும் அவ்வியக்கத்தில் உள்ள சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஊழிய ஈடுபாடும் இவ்வியக்கத்தை தலைமைத் தாங்கி நடத்தும் **Rt. Rev. தேவதாஸ்** அவர்களின் ஊழியமும் மிகவும் சிறப்பாக இருக்கிறது. தேவன்தாமே அவருடைய வெள்ளிவிழா திட்டமான ஒரு இலட்சம் குடும்பங்கள், ஆயிரம் சபைகள், ஆயிரம் ஊழியர்கள் என்ற நோக்கத்தை நிறைவேற்ற உதவி செய்வாராக. இவ்வூழியம் இன்னும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் ஜெபிப்பதும், இன்னும் தேவைப்படும் ஆலயங்களை கட்டிக் கொடுப்பதும் நம்முடைய கடமையாகும். குறிப்பாக இந்த ஆண்டில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் 40 ஆலயங்களும் சீக்கிரமாய் கட்டி முடிக்கப்படுவதற்கும் ஆதரவாளர்கள் முன் வர ஜெபியுங்கள். மேலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்து, நிதி உதவி அனுப்பித் தாங்கும்படியாக அன்புடன் அழைக்கிறேன். தேவனுக்கே மகிமை!

மேற்கண்ட பணித்தள ஊழிய புகைப்படங்களை 17ம் பக்கத்தில் பார்க்கவும்...

## ஷாலோம் சுதேச ஊழியர் மனைவிமார் கூடுகை

தேவனுடைய பெரிதான கிருபையால் மாதந்தோறும் சுமார் 100 மூத்த ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று சிறப்புக் கூட்டம் தாகோத் பயிற்சிக் கூடத்தில் வைத்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கூட்டங்களில் அனைவரும் பீல் மக்களின் இரட்சிப்புக்காக ஆத்தும பாரத்துடன் மற்றும் அந்தந்த மாத ஊழியங்களுக்காகவும் பாரத்தோடு ஜெபம் செய்வார்கள்.

கடந்த மாதம் அனைத்து ஊழியக்காரிகளுக்கும் கூட்டம் நடத்தும்படியாய் ஒழுங்கு செய்யப்பட்டு, அக்டோபர் 8,9,10 ஆகிய தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தானில் முறையே தெல்சர் (குஜராத்) ஆலயத்திலும், அந்தர்வேலியா (ம.பி) ஆலயத்திலும், கொய்கா (இராஜஸ்தான்) ஆலயத்திலும் நடைபெற்றது. இதில் சுமார் 400 ஊழியக்காரிகள் பங்கு பெற்று, ஆத்துமபாரத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றார்கள்.

இந்தக் கூட்டங்களில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் குணசாலியான ஸ்திரி என்ற தலைப்பில் ஊழியக்காரரின் மனைவிமார்கள் எப்படி இருக்க வேண்டும் என்று மிகவும் நேர்த்தியாக கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். அனைவருமே மறுபடியும் ஒரு முறை தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து, குணசாலியான ஸ்திரியாக வாழும்படியாக ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள்.

பாடல் ஆராதனை வேளையிலும் அனைவரும் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். ஜெப வேளையில் ஆத்தும பாரத்தோடு குழுக்களாய் பிரிந்து, ஜெபக்குறிப்புகளை வைத்து ஜெபித்தார்கள். இந்த மாதக் கூடுகை மிகவும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக!

மேற்கண்ட கூடுகைகளுக்கான புகைப்படங்களை 1ம் பக்கத்தில் பார்க்கவும்...

## *மிஷனெரி பெருவிழா*
## *மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை (வேர்கிளம்பி, K.K. Dist.)*

தேவனுடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி கன்வென்ஷன் மைதானத்தில் வைத்து கடந்த அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் 5ம் தேதி வரை (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) ஐந்து நாட்கள் மிஷனெரி பெருவிழா மற்றும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெற்றன.

இதில் நமது ஷாலோம் ஊழியத்திலிருந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 4, 5 ஆகிய தேதிகளில் கலந்து கொண்டு (சனி, ஞாயிறு) தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். இதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டதோடு, அநேகர் தொடப்பட்டு தங்களை அர்ப்பணித்தனர். மேலும் 5ம் தேதி கூடுகையில் வைத்து மூன்று ஷாலோம் சுதேச ஊழியர் குடும்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேக ஊழியத்தின் மூலம் இந்த கூட்டங்களையும் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையையும் ஏற்பாடு செய்து, **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களை அழைத்து பயன்படுத்திய **Pr. J. ஜாண்சகின்** B.Th., B.D., அவர்களுக்காகத் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**பிரதிஷ்டை செய்யப்பட்ட பீல் சுதேச ஊழியர்கள் விபரங்கள்**

1. **சகோ. கல்சிங் S. புரியா** – உதய்புரா, மத்தியப்பிரதேசம்
2. **சகோ. துலா M. டாமோர்** – பஸ்க்ரியா, குஜராத்
3. **சகோ. கெபிலால் G. கராசியா** – ரோகன்யாமெஹ்ஜி, இராஜஸ்தான்

சுதேச ஊழியர்களைத் தாங்கிவரும் **Pr. ஜாண்சகின்** அவர்கள் குடும்பத்திற்காகவும், பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேக ஊழியங்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவன்தாமே அவர்கள் குடும்பத்தையும், ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக!

மேலும் **04.10.2014** அன்று வெட்டுக்குழியிலுள்ள கிருபை மஹாலில் நடைபெற்ற அற்புத சுகமளிக்கும் கூட்டத்தில் நமது சுதேச ஊழியர் குடும்பத்தினர் தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர்.

தேவ கிருபையினால் **05.10.2014** ஞாயிறு அன்று வேர்கிளம்பியிலுள்ள A.G. சபையிலும் **(Pr. ஜாண் ரோஸ்)**, பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேக சபையிலும் **(Pr. ஜாண்சகின்)**, தேவனுடைய வார்த்தையை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பகிர்ந்துக் கொண்டார்கள். தேவனுக்கே மகிமை! சகோதரியை சபையில் பயன்படுத்திய போதகர்களுக்காகத் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

மேற்கண்ட கூடுகை & பிரதிஷ்டைக்கான புகைப்படங்களை 34ம் பக்கத்தில் பார்க்கவும்...

---

### தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

நாகர்கோவில், **ஆல்ஃபா எழுப்புதல் A.G. சபையில் 21.09.2014** ஞாயிறு அன்று நடைபெற்ற ஆராதனையில் நமது ஷாலோம் பேராயர் **வே. தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை **போதகர் Pr. போவாஸ்** அவர்களுக்காகத் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 18

**பதில் எழுதுக :**

1. "வைத்தியனே உன்னைத் தானே குணமாக்கிக் கொள்" என்ற பழமொழியை வாசிப்பது எங்கே?
2. ஈசாக்கு விவாகம் பண்ணும்போது அவன் வயது என்ன?
3. யோசுவா இஸ்ரவேல் புத்திரரை எங்கே விருத்தசேதனம் பண்ணினான்?
4. இருப்புக் காளவாய் எது?
5. தாவீதின் ஞானதிருஷ்டிக்காரன் யார்?
6. மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறிய வேதபாரகன் யார்?
7. காட்டுக் கழுதைக் குட்டிக்கு ஒப்பாகப் பிறந்தவன் யார்?
8. கர்த்தர் எந்த வனாந்திரத்தை அதிரப் பண்ணுகிறார்?
9. அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள் யார்?
10. யாருடைய வழி முள் வேலிக்குச் சமானம்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.11.2014**

**கடந்த மாத வேத வினா போட்டி எண் 17க்கான சரியான விடைகள் :**

1. சமாதானத்தின் ஆலோசனை – சகரியா 6 : 13
2. நீதிமானுடைய உதடுகள் – நீதி. 10 : 21
3. ஆபேல் – எபிரேயர் 11 : 4
4. கர்த்தருடைய கண்கள், நீதிமான்கள் மேல் – 1 பேதுரு. 3:12 or சங். 34 : 15
5. அதிக பொக்கிஷமுண்டு – நீதி. 15 : 6
6. விசுவாசமுள்ளவனாகி. மாற். 16 : 16
7. லேயாள். – ஆதி. 30 : 20
8. அழிந்து போகும் மிருகங்களுக்கு. – சங். 49:12
9. மோசே. – யாத். 3 : 1
10. இஸ்ரவேல் வீட்டார். – மத். 10 : 6

**கடந்த மாத வேத வினாப் போட்டி எண் 17 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 15 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. முத்து லட்சுமி, சென்னை. 2. Sis. சரோஜினி ஸ்டீபன், தூத்துக்குடி.**
**3. Sis. ஜாய் ஜோசுவா, சென்னை.**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்குத் தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பப்படவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பரிசுத்த வேதாகமங்களின் தேவைகளுக்காக**

✞ தேவ கிருபையால் பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக இன்னும் 2000 வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதாகமத்திற்கு ஆகும்

செலவு ரூ. 100 வீதம் 2000 வேதாகமங்களுக்கான தேவைகளான ரூ. 2/– இலட்சங்கள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்**, அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**புதிய நாகர்கோவில் ஷாலோம் கிளை அலுவலகத்திற்காக**

✞ நாகர்கோவிலில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளை அலுவலகத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், அங்கு பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், மேலும் அநேக தேவ ஜனங்கள் வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும், இந்த அலுவலகம் பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் ஒரு தூணாய் விளங்கவும் ஜெபியுங்கள்.

✞ நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அனைத்து ஊழியர் கூடுகைகளுக்காக ஜெபியுங்கள்

✞ 3 மாநிலங்களிலும் நடைபெற உள்ள வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் 15 புதிய கிராம ஆலய பிரதிஷ்டைகளுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்.

✞ அனைத்து ஷாலோம் சபைகளில் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனைகளுக்காகவும், கிராமங்கள் தோறும் நடைபெற உள்ள கிறிஸ்துமஸ் கீத ஆராதனைகள் மற்றும் நற்செய்தி அறிவிக்கும் திட்டங்களுக்காகவும், விசேஷமாக கிறிஸ்துமஸ் மேளாவிற்காகவும், அனைத்து ஆயத்தங்களுக்காகவும் ஜெபியுங்கள். குறிப்பாக இதற்கெனத் தேவைப்படும் ரூ.15 இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

# ஷாலோம் சென்னை கிளை அலுவலகம்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி கடந்த ஆகஸ்டு மாதம் 24ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற **ஷாலோம் மிஷனெரிக் தரிசன கூடுகையில்** உங்களில் அநேகர் பங்கு பெற்று பீல் மக்களை குறித்ததான பாரத்தையும், தரிசனத்தையும் பெற்றுச் சென்றீர்கள். உங்களில் சிலர் மிஷனெரி பணிக்கான காணிக்கைகளை **தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கும்,** ஷாலோம் சென்னை கிளை அலுவலக ஊழியர்களிடத்திலும் கொடுத்து அனுப்பியிருந்தீர்கள். அதற்காக நன்றி கூறுகிறோம்.

சென்னையில் நமது ஷாலோம் கிளை அலுவலகம் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதில் **சகோ. சுதந்திரசிங்** (ஷாலோம் செயற்குழு உறுப்பினர்) அவர்கள் தலைமையில் **சகோ. ஜாண் ஜெயசிங், சகோதரி. இந்திரா ஜாண், சகோ. ஜாண் ஸ்டான்லி, சகோ ஜார்விஸ் எபனேசர்** ஆகியோர் ஊழிய முன்னேற்ற பணியில் செயல்பட்டு வருகிறார்கள். **காணிக்கைகளை செலுத்த சுலபமான வழிகள் :**

- **SHARING LOVE MISSION** என்ற பெயரில் Money Order (or) D.D. (or) Cheque மூலமாகக் கூட தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.
- வங்கி ஆன்லைன் மூலமாக அனுப்புகிற வசதி உள்ளவர்கள் ஆன்லைன் மூலமாக பணம் அனுப்பலாம்.
- எங்களது வங்கிக் கணக்குகளில் தங்கள் காணிக்கைகளை செலுத்தலாம். (வங்கிக் கணக்கு எண்களை 32ம் பக்கத்தில் பார்க்கலாம்)
- சென்னை ஷாலோம் கிளை அலுவலகத்தில் நேரடியாகவும் செலுத்தலாம் அல்லது போன் மூலம் தொடர்பு கொண்டால் சென்னை ஊழியர்களோ அல்லது ஷாலோம் பிரதிநிதிகளோ உங்களிடத்தில் நேரில் வந்து காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு இரசீதினை வழங்குவார்கள்.

**குறிப்பு :** ஆன்லைன் மூலமாக அனுப்பும் ஆதரவாளர்கள், காணிக்கை அனுப்பியவுடன் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு **போன் மூலமாகவோ அல்லது SMS மூலமாகவோ அல்லது இ–மெயில் மூலமாகவோ தெரியப்படுத்த** அன்பாய் கேட்கிறோம். காணிக்கை யார் அனுப்பினார்? என்ற விபரம் எங்களுக்குத் தெரியாத பட்சத்தில் நாங்கள் காணிக்கை அனுப்பிய ஆதரவாளர்களுக்கு இரசீது மற்றும் நன்றிக் கடிதம் அனுப்ப முடியாமல் போய் விடுகிறது. மேலும் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு, காணிக்கைகளை நாங்கள் பெற்றுக் கொண்ட விபரத்தை உடனடியாக SMS மூலமாக தெரியப்படுத்துகிறோம். மேலும் தபாலில் தங்களுக்கு இரசீது மற்றும் நன்றிக் கடிதமும் அனுப்பி வைக்கப்படும்.

சென்னை கிளை அலுவலக முகவரி

**SHARING LOVE MISSION**
No. 102, 2nd Main Road, Sathya Nagar,
Padi, Chennai - 600 050.
Cell : சகோ. ஜாண் ஜெயசிங்–Cell :9698244577, சகோதரி. இந்திரா ஜாண்–Cell : 9698244588

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

**Bro. John Sridhar**
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698844511, 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9382955663

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank (Tiruchendur Road Branch)**
**174100710400061 -** (IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

# ஞாபகப்படுத்துகிறோம்



***அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,***

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் ***9698944522*** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

**தொடர்புக்கு : போன் : 9698044522**

# ஷாலோம் உபவாச ஜெபங்கள்

நேரம் : ***காலை 10.00 மணி முதல் 1 மணி வரை***

| நாள் | இடம் |
|---|---|
| **08.11.2014,** *சனிக்கிழமை* | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்**<br>தொடர்புக்கு:<br>**சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**<br>**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405**<br>**சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820** |
| **15.11.2014,** *சனிக்கிழமை* | எபனேசர் பிளாசா, பரமா நகர், WCC ஜங்சன்,<br>**நாகர்கோவில்.**<br>தொடர்புக்கு:<br>**சகோ. ஜாண் ஶ்ரீதர், Cell : 9698844511** |
| **22.11.2014,** *சனிக்கிழமை* | No. 102 - 2வது மெயின் ரோடு,<br>சத்யா நகர், பாடி, **சென்னை**<br>தொடர்புக்கு:<br>**சகோ. ஜாண் ஜெயசிங், Cell : 9698244577** |

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.11.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்**, பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

நாள் : **22.11.2014** (சனிக்கிழமை)



நேரம் : **நள்ளிரவு 12.00 மணி முதல் மறுநாள்**
**நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம். தொடர்புக்கு : 9698244522

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

## நாட்டு நடப்புச் செய்திகள்

கடந்த அக்டோபர் மாதம் ஹூட் ஹூட் என்ற புயல் 180 கீ.மீ வேகத்தில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைத் தாக்கியது. இதனால் ஆந்திரா, ஒரிஸ்ஸா மாநிலங்களின் கடற்கரைப் பகுதிகளில் பெருத்த பாதிப்புகள் ஏற்பட்டன. இந்த புயலினால் அநேக மரங்கள், கட்டடங்கள், கார்கள் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் ஒரு சில உயிர்பலிகளும் பெருத்த பொருட்சேதங்களும் ஏற்பட்டன.

---

புனே அருகே உள்ள கியூர் என்ற கிராமத்தில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான சுசோ 30 ரக போர் விமானம் விபத்துக்குள்ளானது. லேகிரூகான் என்ற இடத்தில் உள்ள விமானப்படை தளத்திலிருந்து புறப்பட்ட அந்த விமானம் சிறிது நேரத்திலேயே தரையில் விழுந்து நொறுங்கியது. இதில் அதிர்ஷ்டவசமாக விமானிகள் இருவரும் கீழே குதித்து உயிர் தப்பினர்.

---

பருவ நிலை மாற்றம் காரணமாக உலகில் மலேரியா நோய்ப் பரவல் கணிசமானஅளவில் அதிகரிக்கும் என்றும், இதனால் ஆப்பிரிக்காவின் மலைப் பிரதேசத்திலும், தென் அமெரிக்காவிலும் மலேரியா பரவும் அபாயம் எழுந்துள்ளது. பூமியின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க மலேரியா கிருமிகளைப் பரப்பும் கொசுக்கள் உயரமான பகுதிகளில் தங்கள் வாழ்விடங்களை மாற்றிக் கொள்கின்றதால், மலைப்பாங்கான இடங்களில் வாழ்பவர்களுக்கு மலேரியா வேகமாக பரவி வருகிறதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

---

கடந்த ஒரு சில மாதங்களாக உலகை உலுக்கி வரும் எபோலா வைரசால் ஏற்படும் நோய்க்கு, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 4 ஆயிரம் பேர்கள் பலியாகியுள்ளனர். மேலும் அநேகர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுருத்தலாக உள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் மார்கரெட் சான் கவலை தெரிவித்துள்ளார்.

நன்றி : www.bbc.co.uk/tamil


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## பெண்கள் பண்டிகை - கன்வென்ஷன் கூட்டங்கள் (மும்பை)



சிறப்பு செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



சகோதரிக்கு வரவேற்பளிக்கும் Mrs. சார்லஸ் மணி அவர்கள்

## இயேசு விடுவிக்கிறார்- வாலிபர் கூடுகை (21.09.2014-நாகர்கோவில்)



தேவ செய்தியளிக்கும் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



கூடியிருந்த வாலிபர்களில் ஒரு பகுதி

## மிஷனெரி பெருவிழா &
## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை – வேர்கிளம்பி (K.K. Dist)




தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்




மிஷனெரியின் சாட்சி வேளை



ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்படும் மிஷனெரி குடும்பங்கள்



Pr. J. ஜாண்சகின் அவர்கள் குடும்பத்தினருடன் நமது மிஷனெரிகள்

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **தீபக் கட்டாரா**

தந்தையின் பெயர் : ராஜேந்திர கட்டாரா

தாயாரின் பெயர் : அனிதா

பிறந்த நாள் : 25,11,2004

படிக்கும் வகுப்பு : 5th Std.

சொந்த ஊர் : சோட்டாதலாயி

மாவட்டம் & மாநிலம் : பான்ஸ்வாடா, இராஜஸ்தான்

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவனது தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மதுபானம், பீடி போன்றபோதை வஸ்துகளுக்கு அடிமையாக இருந்தார். மேலும் சாத்தானின் பிடியினில் சிக்குண்டு மிகவும் பாதிக்கப்பட்டு, அநேக வியாதிகளோடு காணப்பட்டார். இவரது வியாதிகளுக்காக மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்தச் சூழ்நிலையில் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் ஷாலோம் ஊழியத்தைக் குறித்தும் கேள்விப்பட்டு, ஊழியரிடம் சென்று ஜெபித்தால் சுகம் கிடைக்குமென்று, ஊழியரிடம் ஜெபிக்கும்படியாக வந்தார். ஊழியரும் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தினைக் கேட்டு தேவன் பிசாசின் பிடியிலிருந்தும் வியாதியிலிருந்தும் அற்புத விடுதலைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைக் கண்ட இவர் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்து விசுவாசியாக தேவனை ஆராதித்து வருகின்றனர்.

**மாணவனைக் குறித்து :–** தீபக் நன்றாக படிப்பான். நன்றாக விளையாடுவான். கீழ்ப்படிதலுள்ள மாணவன்.

**ஜெபியுங்கள் :–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற வேலைகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** **Mrs. Nithya Samuel Raj, Thoothukudi.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் **252 மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய்க் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.